[1978 செப்டம்பர் 1

இரத்தினகிரி முருகன் கோயில்

* வினா 23—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் இரத்தினகிரி முருகன் கோயில் இந்து அறநிலையத் துறையின் நிர்வாகத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கோவிலின் சொத்து மதிப்பு என்ன ?

(இ) ஆண்டு வருமானம் இப்பொழுது என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 36,95,096; 1386 ஆம் பசலி ஆண்டின் வருமானம் ரூ. 1,21,485.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற வேறு கோவில்களும், அதாவது அதிக வருமானம் வரக்கூடிய கோவில்களும் நாட்டில் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா ? உதாரணமாக, மாங்காடு காமாட்சி அம்மன் கோவிலில் அதிகமான வருமானம் வந்து கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இரத்தினகிரி கோவிலைப் பற்றித்தான் கேள்வி. அதற்குத் தொடர்பான விவரங்கள் இங்கே இருக்கின்றன. வேறு கோவில்களைப் பற்றி விவரங்கள் தெரிய வேண்டுமென்றால், தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான தகவல்களைத் தருவதற்கு வசதியாக இருக்கும்.

திரு. துரை முருகன் : இந்தக் கோவில் அறநிலையத் துறையின் கீழ் வருவதற்கு முன்னால் பாலமுருகன் அடிமை என்கின்ற சாமியார் அவர்கள் அங்கு இருந்ததின் காரணமாக அவருடைய பக்தர்கள் மூலமாகத்தான் வருமானம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

1978 செப்டம்பர் 1]

இப்போது இந்தக் கோவில் அறநிலையத் துறையின் கீழ் வந்ததற்குப் பின்னல் அந்தச் சாமியாருக்கு ஏதாவது கோவிலில் பொறுப்பு இருக்கிறதா அல்லது பொறுப்பு எதுவும் இல்லாமல் இருக்கிருர்களா ? இந்தச் சாமியாரிடம் பொறுப்பு எதுவும் தராமல் இருந்தால்—அங்கே சாமியார் இல்லாவிட்டால் மீண்டும் வருமானம் இல்லாமல் போய்விடும் என்பதை அரசு உணருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : 1968 மார்ச் திங்கள் இந்தச் சாமியார் அவர்கள் இந்தக் கோயிலில் வந்து தங்கிய பிறகு காணிக்கைகள் மூலமாகவும், அர்ச்சனைக் கட்டணம் என்ற பெயரிலும் பெரிய வருமானம் கிடைத்திருக்கிறது. ஆனல், 1976 மார்ச் இறுதியில் இந்தக் கோவில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருக்கிறது. ஆனல், இப்போது அங்கு நடைபெறுகின்ற திருப்பணி போன்ற வேலைகளுக்கு சாமியார் தலைமையின் கீழ் குழு அமைக்கப்பட்டு, அவருடைய பொறுப்பில்தான் காரியங்கள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, இந்தக் கோவிலின் நிர்வாகப் பொறுப்பு அறநிலையத் துறையின் கீழ் வந்ததின் காரணத்தால், இப்போது நடைபெற்று வருகின்ற நிர்வாகத்திற்கு எந்தவிதமான குந்தகமும் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யானைகள் சரணலயம்

* வினு 24—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யானைகளுக்கு என்று தனியாக உய்விடம் ஏதாவது இம்மாநிலத்தில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : தமிழ்நாட்டில் ஓசூர், முதுமலை போன்ற இடங்களில் யானைகள் அதிகமாக இருந்தும், அவைகளுக்குத் தனியாக உய்விடங்கள் எதுவும் இல்லாமல்